3

உ

சிவமயம்.

வங்காள மாநகர்

ஸ்ரீ சிங்கார முருகேசர் பதிகம்.

சிவகங்கைத் தமிழ்ப் பண்டிட்

மு. ப. கணபதியா பிள்ளை
அவர்களால் இயற்றப்பெற்று

...ரியவீட்டு நகரத்தாரவர்களால்

... வடக்குமாசி வீதி,

... விலாச அச்சியந்திரசாலையிற்

...திப்பிக்கலாயது.

1921.

இ26:417
N21
147600.

உ

சிவமயம்.

ஸ்ரீ சிங்கார முருகேசர் திருவடி வாழ்க.

பலவளமிக்கோங்கிய வங்காளமாநகரின்கண் எஜராவீதியில்
நாட்டுக்கோட்டைத் தனவைசியர்களால் அமைத்துள்ள
நகரப்பெரிய வீடாகிய 34 நிர் தனலெட்சுமி விலாசத்தில்
எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ சிங்கார முருகேசர்

பதிகம்.

இஃது

சிவசங்கைசமஸ்தான வித்துவானும், பசுமலை ஹைஸ்கூல் அண்டு
டிரெயினிங் ஸ்கூலிலும், சிவகெங்கை ராஜாஸ் ஹை
ஸ்கூலிலும், தமிழ்த்தலைமைப்பண்டிதரா யிருந்த
வரும், சேது புராணம், மதுரை மான்மிய
முதலிய நூல்க ளியற்றியவரு மான

மு. ப. கணபதியாபிள்ளை

அவர்களால் இயற்றப்பெற்று

வங்காளம் பெரிய வீட்டு நகரத்தாரவர்களால்

மதுரை வடக்குமாசி வீதி,
ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கலாயது.

1921

894.811
K758

உ

சிவமயம்.

ஸ்ரீசிங்கார முருகேசர்

பதிகம்.

O26:W7 N24

விநாயகர் துதி

வெண்பா

சீரார்வங் காளமெனுந் தேசஞ் செழிக்கவளர்
ஏரார்சிங் காரமுரு கேசனியல்—பேரார்
துதிபதிகமொன்று சொலற்குத்துதிக்கை
அதிபதிபொற் றுளே யரண்.

பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூரணிகிர் பாகரிபு ராதனிச தானந்தி
புவனேசு வரிபூதரப்
புதல்விசத தளவனிதை யர்கள்பணிப வருகொடிய
புரதகனி புனிதவதிநீள்
வாரணிகு யத்திமர கதவல்லி யபிராம
வல்லிதரு பிள்ளையமகனே
மலையமுனி மறுகிட மருந்தளித் திறுதியின்
வணங்கவருள் செய்தவரனே
நீரணிசடாதரநின் மலசொரூ பானந்த
நிட்கள நிராமயவரன்
நீடன்பு கொளமுன மமர்ந்துபிர ணவமதை
நிகழ்த்துசந் தானநிதியே
தாரணி துளபமாலின் மருகமுரு காதவச்
சாமியிது தருணம்வருவாய்
சங்காரு மலர்வாச வங்கா[illegible] நகரீச
சிங்கார முருகேச[illegible].

சிங்காரமுருகேசர் பதிகம்.

குமரபன் னிருகரா சண்முகா காங்கயா
குலிசன்மக ளினியகணவா
குகாகுன் றெறிந்தவா சரஹண பவாகுறக்
குல்வளியி னிடமேகியே
பமரமொலி புரிகுழற் றரளநகை யனநடைப்
பவளவித ழினியகுயிலை
பாவையென் னுவல்தீ ரென்றுபலவேடம்
பரித்துமண மதுசெய்தவா
அமரர்பதி முதலனைவர் களுமணுகியீசனே
பத்தனே யசுரர்துயரின்
அகற்றியாண் டருளென் றமற்றித் துதிப்பவுட
னபயத்த மருளியார்த்துச்
சமரமதி லெதிர்சூர பன்மனைச் சிங்கனைத்
தாருகற் செற்றதலைவா
சங்காரு மலர்வாச வங்காளநகரீச
சிங்காரமுருகேசனே. (2)

மங்களகல் யாணனே வள்ளிமண வாளனே
மருவாதி மூலவடிவே
மறைப்புக ழுதித்தசின் மயதேசிகாகரிய
மால்விகடரூபமாகித்
துங்கமிகு சந்நிதி துளங்கிநட னஞ்செய்து
தோத்தரித் திடவணங்கிச்
சுதரிசன மீந்தவன் சோதரா கங்கையாந்
தோகைமயி லுதவுசுதனே
சிங்கார கோலாக லாமயிலி லிவருஞ்
சிதாகாசஞானவொளியே
சிற்பரா னந்தநிலை விற்பனதற்பரா
திருமருக னனதேவா
தங்காது சூழவுல கங்கனை யளித்தவ
தயாபரா வந்தருளுவாய்
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
சிங்காரமுருகேசனே. (3)

அப்பனே யருமறைக ளின்னமுங் காணொணு
வய்யனே துய்யமூல
வாதியந் தமுமிலா தவவற்பு தாகரா
வத்துவித சுத்தநிலையே
துப்பனைய மேனிச் சுபஞ்சோதி யேநயந்
தோன்றுசுந் தரவிலாசா
தொல்லுலகெ லாமுநற் பணியவெழு மணியனே
துரியதுரி யாதீதனே
மைப்புய னிறத்தனுந் திமினில்வரு பவனிடம்
வந்துபிர ணவமென்னென
மயங்கச் சிரந்தனிற் குட்டிவெஞ் சிறைவைத்து
மன்னுயிர்பல் லண்டகோடி
தப்பறத் தாவரவி தங்கண்முதல்யாவுஞ்
சமைத்தவனை யாண்டதரனே
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
சிங்கார முருகேசனே. (4)

வாதபித் தஞ்சிலேட் டுமேவகைமி னுலுலவி
வருபயித் தியம்வயிற்று
வலிகுன்ம மீளைகா சங்கிறுகிறுப்புதலை
வலிவலிப் பிருமல்சூலை
சீதம்விழு தல்வயிற் றோட்டஞ் சயித்தியந்
தினவுகா மாலைபேதி
சிரங்குருட் டங்களரை யாப்புபுண் வெடிசூலை
தேமனீ ரிழிவுமேகம்
ஓதங்கன் னேசைகை காலசதிவாயுவி
னுபாதிமல டானபிணிகள்
உனதுதரி சனமடைந் தவரிடத் தணுகாம
லோடுமெனி னிதுமகிமை
தாதங்க மூற்றவோங் காரனே தமியனூற்
சாற்றுந் தகையதாகுமோ
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
சிங்கார முருகேசனே. (5)

உலகங்கள் தட்டழிந் திடினுநிலை மாறியே
யுவரியே முஞ்சுவறினும்
உயர்மலைக ளேழுங்கரிந்துதா ளாகியே
யுதிறினுமு காந்தமாகி
நிலவரிய பஞ்சபூ தங்களுநந் தத்தம்வினை
நின்றுவலி கொண்டுடற்றி
நீடுபல கோடிவரு டத்தார்ந் தழிந்துமால்
நிலையபனி னிலைகுலையினும்
விலகருநின் னன்பர்மன வுறுதிக்கு மேன்மைகள்
விளங்குநின் கருணைக்குமோர்
விளிவுமுண் டோவிந்தி ரன்சேபனைச்சிறையின்
வெளிசெய்த வாவிமலனே
சலகமல வனிதையேய்ந் திலகவுலகத்தினர்
தழைத்திடக் கிருபைபுரியும்
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
சிங்கார முருகேசனே. (6)

எத்தனைவி தத்தினி லரற்றியும்நின்செவிக்
கேறுததென்னேனழையேன்
ஏதமே தேனுஞ்செய் தேனோவென் னன்னையர்க
ளிருவருஞ் சொல்லொணுதோ
பத்திநிலை வியவீர பாகுசொன் னுலவர்
பதத்தினுக் கிழிவுவருமோ
பாரியக லாபமயி லோதினல் முன்னுளவை
பகிரங்க மாகிவிடுமோ
புத்தியி னிறைந்தபுல வர்கள்பாடு பனுவலிற்
புந்திசென் றுற்றதேயோ
பொன்னுலகர் குறைபாடுகூறித் துதித்துமுன்
போற்றிநின் றிடுதலியதோ
சத்துவகு ணுளதமி யேனறிகி லேனீ
தகப்பனுன்மகனுனுவாய்
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
சிங்காரமுருகேசனே. (7)

உன்னடியர் கூட்டத்தி னுறவுவேண் டும்பெரிய
　　ருரைவழியி னொழுகல்வேண்டும்
உறுதிதரு கலைகள்பல வோதவேண்டும் வறுமை
　　யுற்றவர்க் குதவவேண்டும்
வன்னமனை மக்களுடன் வாழவேண் டும்வாய்மை
　　வளனைநான் வாயவேண்டும்
மதியறிவு வேண்டுநன் மார்க்கசௌ பாக்கியம்
　　வளரவேண் டும்புலவர்பாற்
பொன்னிலகு கவிகள்பல புனையவேண் டும்புவிப்
　　பொறையினும் பொறுமைவேண்டும்
புகழவேண் டும்முலகு மகிழவேண் டுஞ்சர்வ
　　பூஜிதவ லங்காரனே
தன்னிகரி லாதநின் றுளிணைகள் மறவாத
　　தன்மைநீ தந்தருளுவாய்
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
　　சிங்காரமுருகேசனே. (8)

காரணங் காரியமீ தென்னவறி யாதவன்
　　கலைகளறி யாதகயவன்
காமவநு போகமே சேமவநு கூலமாக்
　　கருதியலை கின்றகசடன்
பூரணமி லாதமதி யாளருற வான்பிறர்ப்
　　புன்மைகண் டெள்ளமறவான்
புண்ணியஞ் செய்திடற் கெண்ணிடா னன்றவர்கள்
　　புந்திமகி ழப்பண்ணிடான்
தோரணங் கட்டிவீண் சண்டைகள் விளைத்திடுந்
　　துட்டர்கணின் னுலயத்தைச்
சூழ்ந்தபிர தக்கணஞ் செய்யினவை யெல்லாந்
　　துலைந்துபரி சுத்தராகித்
தாரணி தனிற்கோடி பக்தர்களிலிவர்களுஞ்
　　சாருவர்க ளிதுசரதமே
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
　　சிங்கார முருகேசனே. (9)

விக்கினம்விலக்கியருள் விபுதர்பணிதாயகா
வேதமுடி தனினடமிடும்
மெய்யனே யீராறு கையனே யுண்மையை
விசாரிக்க விரியுமிறையே
தொக்கினை வருத்தித் துதிப்பரிடர் தீர்த்துச்
சுகந்தனிலே தருமொருவனே
துட்புருவு டன்நார தாதிபண் பாடித்
தொழற்குரிய சூர்ப்பகைவனே
இக்குவில் லவனரிய மைத்துன தத்துவா
தீதத் திலங்கீஸ்வரா
இனியசா தகசர்வ வல்லவ புராதனத்
தேறுமுழு துணருபகவா
தக்கபுகழ் மேவுதன வணிகரெந்நாளுநின்
றுள்பணிய வாழ்குருபரா
சங்காரு மலர்வாச வங்காள நகரீச
சிங்கார முருகேசனே. (10)

உ

சிவமயம்.

ஸ்ரீசிங்காரமுருகேசர் தேவாரப்பதிகம்.

ஆலநீழலுகந்ததிருக்கையே என்ற தேவாரமெட்டு.

இராகம் காம்போதி

கந்தனேகுகனேகடம் பாசண்மு
 காகலையுணருபுலவாசெழுஞ்
செந்திலம்பதி வந்தவரோதயா
 தேவர்சேனையதிபதியேதமிழ்த்
தந்தமாமுனிவற் குபதேசஞ்செய்
 சாமிநாததயாபரதற்பரா
சிந்துரானனன் சோதரபோதமர்
 சிதரன்மருகாமுருகேசனே. (1)

கேசமேற்கிரீ டங்கள்கிளர்ந்திடக்
 கிஞ்சுகச்செஞ்சொற் குஞ்சரிவஞ்சியும்
வாசமல்கு வனக்குறவள்ளியும்
 மருவியேயிருபாங்கினுமோங்கிடத்
தேசுலாவிய கூர்வடிவேற்கரஞ்
 சேர்த்துமாமயிமேலறிநின்சேவைதந்
தாசுதீர்த்தருள் வாயிக்கலியுகத்
 தப்பனேவொப்பிலாதமெய்யய்யனே. (2)

அய்யமில்லைநின் னன்பர்கள்வேணவை
 யாவுமேயடைவாரிதுமெய்ம்மையே
துய்யனுமருணகிரி சொல்புகழ்ச்
 சுவையைநாடிமுன் தோன்றியசுந்தரா
பையனுகிமுன்வேதம் விரித்துரை
 பண்ணவாவிண்ணவர்துதி பன்னிரு
கைபனேகார்த்தி கைமாதர்காதலா
 கருணைவைத்தெனைக் காத்தல்கடனரோ. (3)

கடங்களூற்றுங் கரியொருவேறிய
கடவுள்நாத காமன்மருகா றாதி
விடங்கலந்தொளிர் வேற்கைவிநோதசெவ்
வேள்சுரேச மலையெறிந்தாய்மலர்த்
தடங்கள்சூழும் வங்காளநகர்தனிற்
றனவணிகர் சமைத்ததளியினில்
மடங்கலென்ன வமர்ந்தருள்செய்பவா
வள்ளலேசுப்ர மண்யவரதனே. (4)

வரதத்தோடப யத்தத்திறற்றன
வணிகர்நாளும் வளத்தினிலோங்கவும்
சரதம்நீவிரஞ்சேலென்பதாக்கியுஞ்
சார்ந்தசாமி தகுவர்கள்காலனே
மரகதமணி யாலிழைமாடங்கள்
மன்னியோங்கு வங்காளநகரனே
குரகதமயி லேறிமுன்வந்திடிற்
குறையெவர்சொல்லுவார்குகநாதனே. (5)

நாதனேயுல கங்களெவைகட்கும்
நாயகமதி வேணியாற்குரை
போதனேகிர னைச்சிறைவைத்திடப்
போற்றியேமுரு காற்றுப்படையினை
ஓதக்கேட்டுவந் தாண்டமுருகனே
உன்னில்வேறுதெய் வங்களுமுண்டதோ
சீதமேவும் வங்காளநகர்வளர்
சிங்காரமுரு கேசவந்தாள்வையே. (6)

வையம்வேண்டிலன் மாநிதிவேண்டிலன்
மக்கள்வேண்டிலன் ஒக்கலும்வேண்டிலன்
மெய்யும்வேண்டிலன் மேன்மையும்வேண்டிலன்
வேதஞ்சொல்லும் வியனறம்வேண்டிலன்
ஐயனேநின் கிருபைக்குப்பாத்திர
னாகிநின்னடியாருள்ளொருவனாத்
துய்யபாதத் துணையருள்வேண்டினன்
சுந்தரானந்த சிற்சுகசோதியே. (7)

சோதியேயம லாதிதவாசனே
சுப்ரமண்ய சுவர்ணவடிவனே
மாதிருவர் மகிழ்ந்தணைவாகனே
வஞ்சநெஞ்சர்க வுஞ்சம்பிளந்தவா
தாதிவர்தேன் றதும்புகடப்பகற்
றாரணிதணி காசலசண்முகா
நீதியாமுறை யோங்குவங்காளமா
நிணகர்க்கிறையே தருவாரியே. (8)

தருவராரருள் நீயன்றிநான்மகன்
தந்தைநீயெனல் தாரணிதேருமே
மருவலரசு ரர்கிளைவேரற
வாட்டிவானவர்க் குச்சுகந்தந்தவா
பெருவரங்கள் தனவணிகர்குலம்
பெற்றுய்யற்குப் பெரிதுவந்தார்ந்தமை
பருவமேககிர் பாகரசேந்தனே
பாரதீர பராக்ரமவள்ளலே. (9)

வள்ளவாய்ச்செழு மாமலர்மீதனம்
வாயவண்டு சுதிசெயமாங்குயில்
தெள்ளியபண்கள் பாடிடக்கேகயம்
சிறைவிரித்து நடித்திடத்தேர்ந்திடில்
உள்ளவாறொரு நாடகசாலையா
யோங்கிமன்னும்வங்காளநகர்தனில்
தள்ளைபோலனை வர்க்கும்வரந்தரு
தந்தையேசிங்காரமுருகேசனே. (10)

உ

சிவமயம்.

ஸ்ரீசிங்கார முருகேசர்பேரில் கட்டியம்.

பாதிமதி நதிவேணி யரனுதவுபாலகன்
    பயில்கடம் பணிவேலவன்
பழநிமலை குன்றுதோ றாடல்சீரலைவாய்
    பரங்குன்று திருவேரகம்
பன்னரியசோலைமலை யாமாறுத்தானம்
    பதிந்தமர்ந்தாண்ட பரமன்
பருமணிகளொளிருபன் னிருபுயன் றருமருவு
    பதிமகளினினிய கணவன்
பங்கயா சனிமரு கனனகோ லாகலன்
    பகவனுள மகிழவுரை செய்
பரமகுருநாதன்கு கன்சண்மு கன்வீர
    பாகுபணி வாகுலேயன்
பகர்சரவ ணோற்பவன் பைந்தமிழ்க் கிறைஞான
    பாண்டியன் வேண்டுமடியார்
பாலிலன்புள்ளவன் அருணகிரிபாடற்
    பரிந்துகொண் டருளுபுலவன்
தாதிவரு மலர்வனஞ் சார்ந்துதிகழ் வாவியுக்
    தருமணிகளாலிழைத்துத்
தயங்குமதி மண்டல முயங்குமுயர் மாடத்
    தலங்களா வணைவரிசையும்
தரணியி லுளோர்பவமகற்றுகடவுட்கங்கை
    தான்வளர்தருதன்மையும்
தழைத்திலகு வங்காளநகரி[illegible]ற் றனவசிய
    சற்சனர்கள் மெச்சுபுகழ்சேர்

தருமகுண சீலரெங் நாளுமென் மேலுந்
தரத்தனந் தருதிசாரச்
சம்பிரம மாயவர்சமைத்த நல்லாலயந்
தனிலமர்ந் தெழில்செய்யன்னோர்
சரியைமிகு பணிகொள்சிங் காரமுருகேசசிவ
சாமிவருடங்கடோறும்
சாற்றுபங்குனியி லுத்திரநாளிலங்குள
ஜனங்களெல்லா மகிழ்கொடு
பூதியணிமெய்யராய்க் கௌமார பத்தியே
பூண்டனுதினமுமோங்கிடப்
பொன்னிலகு சிங்கார ரதமேறியம்பொற்
பொலன்சதங் கைகளணிந்து
புனையிரண்டிடபமீர்த் தேகிடச் சாமரம்
புதியகுடை கொடிசுருட்டி
புறங்களெங்கணுமுலவ வாத்தியங்களினோசை
புணரியோசையை யடைப்பப்
பூதேவரனைவரும் வேதபாராயணம்
புகலமற்றவர்க ளெல்லாம்
பொங்கரவணிந்தசிவசங்கரன் பாலனே
புனிதசண்முகவேலனே
புண்ணியா சர்வவல் லமையுள்ள தேவனே
புலவனேயென்று புகழப்
பொறியரவ மீதுதுயில் மால்சகோ தரிபனை
புரந்தரீவி மலைபுக்கவி
ஆதிகா ரணிதன்னை வளர்காளி காட்டெனவி
வவனிபுகழுந் தலத்திற்
கம்மைகுஞ் சரிவள்ளி நா பகி சமேதராய்
யானைமுகவண்ணல் முன்னம்

ஆகிடவிடும்பன்முத லானபரிவாரமு
மடுத்தடுத் துலவியேக
அனுகியங் கியல்தன வணிகர்கள் மடத்தினி
லமர்ந்து தீர்த்தங்கொடுத்தும்
அழகுகாவடிக ளபிஷேகமதை யேற்றும்நீள்
அன்னக்கொடியை யுயர்த்தி
ஆடையுணவுதவிநற் றீர்த்தப்ரசாதமு
மளித்துமைந்தாம் நாளினில்
அனவரதமும்நகர வணிகர்கள்பணிந்திடற்
கானவங்காள நகரில்
அருமைஎஜராவீதியாலயக்கொலுவினி
லமைந்தருள் புரிந்தனன்ரோ.

கும்பாபிடேக வாழ்த்து

அகிலவுலகங்களும் பணிவதற்குரியதா
யருமறைகளுரைபுரிவதாய்
அரன்வரம் பெற்றதாய்த் தன்னிடம்படிபவர்க்
கருவினைக டீர்த்துமிறுதி
யானமோக்ஷத்தினை யளிப்பதாய்ப் புண்யநதி
யாவையினு மேலானதாய்
அணிசெய்கங் காநதி வளந்தருந்தன்மையா
லளகையம்பதி நேரதாய்
முகிலினந்தவழ்சோலை மாடங்களுடையதாய்
முயற்சி மனவுறுதி வாய்மை
மூன்கொண்டிவ் விந்தியர் தழைத்திடவுழைக்குமதி
முதியர்பலர் வாசமதனால்
முத்திதரு நகரமெவைகளினுஞ்சிறந்ததா
மொழியும் வங்காள நகரில்

மோனநன்னீதிநிதி பெற்ற நகரத்தவர்கள்
முருகன் குகன் சண்முகன்
சிகிவாகனன் றேவர் சேனதிபதியரன்
றேசிகன் செட்டிபுலவன்
சிங்கார முருகேசனென வடிவேலன்
சிறப்பினுற்றருள் செயற்குத்
திகழுமெஜராவீதி முப்பத்துநான்கெனச்
செப்புமனை பெற்றாலயத்
திருப்பணிகள்செய்துதன லெட்சுமிவிலாசெனச்
செழியநற்பெயர்புனைந்து
மகிபுகழ்துன் மதிவருட மாதந்து லாந்திகதி
மருவுபதினேழுபுதனுள்
வளர்காலை யேழரைமு தற்பன்னென் றையகால்
வரைக்குள் நாழிகைதனுனினில்
மறையவர்க ளெக்கியம் வளர்த்திடத்தவில்முரசு
வாத்தியங்களுமொலிப்ப
மகத்துவமிகுத்திலகு கும்பாபிடேகம்
வழங்கினர்கள்வாழிமாதோ

வாழி

வெண்பா.

வேத முயர்வேள்வி மேகமுரு கேசனிரு
பாதஞ்சை வாகமங்கள் பார்வாழி—நீதமிகு
நல்லவர்க ளிந்நூல் நவின்றோர்கேட் போர்விரிப்போர்
எல்லவரும் வாழி யினிது

சுபம்! சுபம்!! சுபம்!!!

சிவமயம்.

வங்காளமாநகர்

ஸ்ரீ சிங்கார முருகேசர்.